

TAMIL

# யாருக்கு ஓட்டு? Vote for whom?

*R. ஸ்டான்லி*




மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்குமான தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது (ஏப்ரல் 2019). தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தேர்தல் பிரசாரத்தையே பிரதானமாய் ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. ஒருவர்மீது ஒருவர் சகதி எறிவது வாடிக்கையாகிவிட்டது. யார் உண்மை பேசுகிறார், யார் பொய்யை அள்ளி வீசுகிறார் என்று எவருக்கும் தெரியாது. நன்னெறியற்ற செயல்பாடுகள் மலிந்து காணப்படுகின்றன. ஒரு காசுகூடப் பெறாத மேடைப் பேச்சுகளில் நேரமும், பலமும், பணமும் விரயமாகின்றன. ஒருவரையொருவர் தாக்கிப் பேசுவதும், அவற்றை எதிர்த்துப் பேசுவதும்தான் செய்தித்தாள்களை நிரப்புகின்றன. கேட்பதும் வாசிப்பதும் நம்மை வாந்தியெடுக்க வைக்கிறது. எளியோரும் படியாதோரும் ஏமாற்றப் படுகின்றனர். வாலிபர், நங்கையர் குழம்பி நிற்கின்றனர். இக்காலக் கட்டத்தில் இந்தியக் கிறிஸ்தவராகிய நமக்கு இறைச்செய்தி யாது?

ஒரு சில அரசியல்வாதிகளுக்கோ கட்சிகளுக்கோ ஆதரவாகவோ எதிராகவோ ஜெபிக்கும்படிக் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்கும் பிரசங்கிமாரும் ஊழியரும் உண்டு. இது திருவிவிலியத்திற்குச் சற்றும் ஏற்றதல்ல. ஒவ்வொரு கட்சியிலும் நல்லதுமுண்டு, தீயதுமுண்டு. நாட்டின் நலனுக்காகவும் சேமத்திற்காகவும் ஜெபிக்கவேண்டியதுதான் நமது பொறுப்பு; நிலைமைக்கேற்றவாறு தலைவர்களைத் தெரிந்தெடுத்து அமர்த்துவதோ தேவனது அனந்த ஞானத்தின் வெளிப்பாடு. எரியும் அக்கினிச் சூளையிலிருந்து சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோர் அற்புதமாய் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னர் நேபுகாத்நேச்சாருக்குக் கிடைத்த உள்ளுணர்வு அபாரமானது. பூவுலகெங்கும் குடியிருக்கும் அனைத்து மக்களுக்கும், இனத்தாருக்கும், மொழியினருக்கும் அவர் எழுதியனுப்பியது: ''மனிதர்களின் அரசை உன்னதமானவரே ஆளுகிறார்; தாம் விரும்பியவர்க்கே அதனைத் தந்தருள்வார்; மனிதருள் தாழ்ந்தவர்களையே அதற்குத் தலைவர்களாக்குகின்றார் ... ஆணவத்தின் வழிநடப்போரை அவர் தாழ்வுறச் செய்வார்'' (தானி 4:17,37).

ஏரோது ஆண்டால் என்ன, பிலாத்து ஆண்டால் என்ன, அது இயேசுவுக்குப் பொருட்டல்ல. பெலிக்ஸ் ஆண்டால் என்ன, அகிரிப்பா ஆண்டால் என்ன, அது பவுலுக்குப் பொருட்டல்ல. கிறிஸ்தவராகிய நமது மனப்பான்மையும் இப்படித்தான் இருக்கவேண்டும். ஊழலும் அவபக்தியும் இல்லாத அரசியல்வாதியும் கிடையாது, கட்சியும் கிடையாது. ரோமர்களைத் துரத்தியடிக்க அல்ல, தேவாலயத்தைத் தூய்மைப்படுத்தவே சவுக்கை இயேசு கையிலெடுத்தார் (யோ 2:13-17; லூக் 19:45,46). திருச்சபைக்கு வெளியே இருப்பதைவிட அதற்கு உள்ளேதான் ஊழலும் அக்கிரமமும் அதிகம். உப்பாகிய நாம் உப்புத்தன்மையை இழந்துவருகிறோம்; விளக்காகிய நாம் வெளிச்சத்தை இழந்துவருகிறோம் (மத் 5:13-15). தேவனுடைய வீட்டில்தான் நியாயத்தீர்ப்பு துவங்கவேண்டும் (1 பேது 4:17). திருச்சபையோடுதான் தேவன் முதலாவது செயல்படுகிறார் (வெளி 2 & 3); பின்னர்தான் நாடுகளோடு இடைபடுவார் (வெளி 6 மற்றும் அடுத்து). சபை போகிற போக்கில்தான் சமுதாயம் போகும்! சபை மனந்திரும்பினால் சமுதாயம் மலர்ச்சியடையும் (2 நாளா 7:14).

கிறிஸ்தவத்திற்கு எதிரானதொரு கட்சியை ஆண்டவர் தமது அனந்த ஞானத்தின்படி ஆட்சியில் அமர்த்துவாரானால், அவரது வல்லமை அசாதாரணமாய் வெளிப்பட அது

-- 2

ஏதுவுண்டாக்கும். இறைமக்களை நசுக்கிய பார்வோன் ஆட்சிக்கு வந்தால், ''சமுத்திரம் இரண்டாகப் பிரியும்'' அற்புதம் நடக்கும் (யாத் 14:21-29). தேவாலயத்திலிருந்து பாத்திரங் களை விக்கிரகக் கோயிலுக்கு எடுத்துச்சென்ற நேபுகாத்நேச்சார் ஆட்சிக்கு வந்தால், ''தீயின் கொடுமையைத் தணிக்கும்'' அற்புதம் நடக்கும் (தானி 1:1,2; 3:26; எபி 11:34). உன்னத தேவனை நோக்கி ஜெபிக்கத் தடை விதித்த தரியு ஆட்சிக்கு வந்தால், ''சிங்கங்களின் வாய்களைக் கட்டிப்போடும்'' அற்புதம் நடக்கும் (தானி 6:6-9, 18-23; எபி 11:33). கிறிஸ்தவ ஊழியரைத் துன்புறுத்திய ரோமர் ஆட்சிக்கு வந்தால், ''சிறைச்சாலைக் கதவுகள் தகர்ந்து விழும்'' அற்புதம் நடக்கும் (அப் 12:1,6,7; 16:20-26; எபி 11:36). துன்புறுத்தலுக்குள்ளான ஆதிச்சபை ஏறெடுத்த ஜெபமே நமதாகட்டும் (அப் 4:23-31). அப்பொழுது ''அடையாளங் களும் அற்புதங்களும்'' தொடரும்; நற்செய்தியை இன்னும் கூடுதல் ''தைரியத்துடன்'' பிரசங்கிப்போம்.

அமெரிக்காவிலுள்ள கிறிஸ்தவ விசுவாசிகளில் பெரும்பாலானோர் பராக் ஒபாமா அவர் களுக்கு எதிராக ஜெபித்தனர்; தேவனோ அவரை அடுத்தடுத்து இருமுறை அதிபராக்கினார்! யாரை நமக்குக் குடியரசுத் தலைவராக்கவேண்டும், யாரைப் பிரதமராக்கவேண்டும் என்றெல்லாம் தேவனுக்கு ஆலோசனை சொல்லும் முட்டாள்களாய் நாம் மாறிவிடக்கூடாது (ரோ 11:33-35). ''தாம் வரையறுத்துள்ள திட்டத்தின்படியும், தமது முன்னறிவின்படியும்'' தேவன் செயல்படட்டும் (அப் 2:23).

அரசியலுக்குப் பின்னணியில் காணக்கூடா சக்திகள் பலவுண்டு. நாட்டின் இன்றைய நெருக்கடி ஓர் ஆன்மீகப் போராட்டமே (எபே 6:12). தேர்தல் வேட்பாளர் அத்தனை பேருக்காக வும் ஜெபியுங்கள். நாட்டிலுள்ள கோடிக்கணக்கான வாக்காளர்களை தேவன் தொடும்படி விண்ணப்பியுங்கள். கீழ்வரும் குறிப்புகளை நினைவில் வைத்து மன்றாடுங்கள் —

*(அ) நீதி:* ஊழலும் தன்னலமுமற்ற தலைவர்கள் தேவை. அவர்கள் மாய்மாலம் இல்லாது, நேர்மைக்கும் உண்மைக்கும் பெயர் பெற்றிருக்கவேண்டும். அரசியலில் இதெல்லாம் சாத்தி யமா என்று கேட்போம். ஆனால், ''நீதியானது நாட்டை உயர்த்தும்; பாவமோ எந்த மக்களுக்கும் இகழ்ச்சி'' எனத் திருமறை அழுத்திக் கூறுகிறது (நீதி 14:34). வேறு வழியில்லை.

*(ஆ) மதச்சார்பின்மை:* சொந்த விசுவாசத்தைப் பயிற்சிக்கவும், பறைசாற்றவும் மதச் சுதந்திரம் நமது சாசனத்தில் உண்டு. ஆனால் இவ்வுரிமை கொஞ்சம் கொஞ்சமாக வேரறுக்கப் பட்டு வருகிறது. எங்கும் சென்று எவருக்கும் நற்செய்தியை அறிவித்து, அவர்களைச் சீடராக்கி, அவர்களுக்குத் திருமுழுக்கு கொடுத்துத் திருவுபதேசம் கொடுக்கவேண்டுமென்று இயேசு தந்த பேராணைக்குக் கீழ்ப்படியாது அவரது அடியவராயிருப்பது சாத்தியமோ? (மத் 28:19,20). அதே வேளையில், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நாம் தவறியதை ஆண்டவரிடம் துக்கித்து அறிக்கையிடுவோம்.

*(இ) எளியோர்க்குதவி:* நிலையற்ற ஆட்சியால் நாட்டின் பொருளாதாரமே பெரிதும் பாதிக்கப்படும். வறுமைக்கோட்டிற்குக் கீழிருப்போர் பெருகிக்கொண்டேயிருக்கின்றனர். அன்னாரது கூக்குரலைக் கேட்க எவருமில்லை. எளியோர்க்கு இரங்கும் அரசைக் கடவுள் ஆசீர்வதிப்பார் (தானி 4:27). தனது வாசற்படியில் கிடக்கும் ஏழை லாசருவுக்கு உணவளிக்கத் தவறியதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆண்டவரிடம் அறிக்கையிடவேண்டும் (லூக் 16:19-21). தங்கள் தெருவிலும் சுற்றத்திலுமுள்ள விதவைகளையும் அநாதைகளையும் ஆதரிக்கத் தவறியதை ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பமும் ஆண்டவரிடம் அறிக்கையிட வேண்டும் (யாக் 1:27). தனது அலங்கார வாசலில் அலங்கோலமாய்க் கிடக்கும் பிச்சைக் காரனைத் தூக்கியெழுப்பத் தவறியதை ஒவ்வொரு திருச்சபையும் ஆண்டவரிடம் அறிக்கை யிடவேண்டும் (அப் 3:1-8). செய்ய வேண்டியதைச் செய்யத் தவறிய பாவிகளாகிய எங்கள் மீது, ஆண்டவரே, கிருபையாயிரும்!

-- 3

*(ஈ) நாட்டின் ஒருமை:* தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கும் இராஜ்யம் நிலைநிற்காது என்றார் இயேசு (மாற் 3:24). இனவெறியை அறவே ஒழிப்பதற்குப் பதிலாகச் சில அரசியல்வாதிகள் அதனைக் கிளப்பிவிடுகின்றனர். எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும், அதைத் தக்கவைத்துக்கொள்ளவேண்டும், என்பதே அவர்களது நோக்கு. தென்னகத்திற்கும் வட மாநிலங்களுக்கும் இடையேயும், ஆரியருக்கும் திராவிடருக்கும் இடையேயும் பகைமை வளர்ந்துகொண்டே வருகிறது. ''மனிதர்மீது பிரியம்'' என்பதே கிறிஸ்தவம் பறைசாற்றும் செய்தி (லூக் 2:14). நாட்டை ஒருங்கிணைத்து நடத்தும் தலைவர்கள் தேவை. நடந்துவரும் கொலைகளும் உடற்சேதங்களும் போதாதா?

*(உ) சமூகச் சீர்திருத்தங்கள்:* தீண்டாமை, குழந்தைத் திருமணம், வரதட்சணைக் கொடுமை, உடன் கட்டை ஏறுதல், தேவதாசிப் பழக்கம், மதுவினால் சீரழிவு, பெண்களுக்கெதிரான குற்றங்கள், இவைபோன்ற சமூகத் தீங்குகளால் நாடு பாதிக்கப்பட்டுள்ளது. சிங்கம்போல் துணிந்து இந்த அவமானப் பழக்கங்களை எதிர்த்து, ஒழித்து, மக்களை இருளிலிருந்து வெளிக்கொணரும் சீர்திருத்தத் தலைவர்கள் தேவை. பதவிக்கும் பணத்திற்கும் பண்பாடுகள் பலியாகிவிடக்கூடாது.

நாட்டின் நலத்திற்கு மேற்கூறியவை அடிப்படையானவை, இன்றியமையாதவை. இவை தவிர்த்து உங்களுக்குத் தோன்றுபவற்றையும் ஜெபக்குறிப்புகளாய்ச் சேர்த்து தேவனுக்குமுன் மன்றாடுங்கள். கூடி உபவாசித்து ஜெபியுங்கள். சிங்காசனத்தில் இருப்பவர் நமது தேவன்தான்! தேர்தல் ஆணையர் மற்றும் அனைத்துத் தேர்தல் அதிகாரிகளுக்காய் ஜெபியுங்கள். வாக்குச் சாவடிகளில் முறைகேடுகள் நடக்காதிருக்க வேண்டுங்கள். அனைத்தும் நியாயமாய் நடக்கவேண்டும்.

ஜெபித்தால் மட்டும் போதாது. செயல் இல்லா விசுவாசம் செத்தது. ஒவ்வொரு கட்சியின் தேர்தல் அறிக்கையையும் கவனித்துப் படியுங்கள். அனுபவமும் முதிர்ச்சியுமுள்ளோரோடு கலந்துரையாடுங்கள். வாக்குவாதம் வேண்டாம். பொறுப்பற்ற அரசியல்வாதிகள் அள்ளி வீசும் தேர்தல் வாக்குறுதிகளை அப்படியே நம்பிவிடாதீர்கள். உரிமையும் பொறுப்பும் நிறைந்த தனி நபர் நீங்கள். சிந்தியுங்கள், ஜெபியுங்கள், வாக்களியுங்கள். யாருக்கு வாக்களித்தீர்கள் என்று எவரிடமும் சொல்லாதிருங்கள்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும், அது நீங்கள் விரும்பியபடி இருந்தாலும் இல்லாவிட்டாலும், தேவன் தமது பாணியிலேயே நமது ஜெபங்களுக்கெல்லாம் பதிலளித்துவிட்டாரென்று அவரைத் துதியுங்கள் (ரோ 13:1). ''நாம் இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய், தொல்லையின்றி அமைதியோடு வாழ்ந்திட'' தேர்தலில் வெற்றிபெற்ற அனைத்துத் தலைவர்களுக்காகவும் தவறாது ஜெபிக்கத் துவங்குங்கள் (1 தீமோ 2:1,2). எக்காலத்திற்கும் பொருந்தும் அப்போஸ்தலன் பேதுருவின் அறிவுரையோடு இச்செய்தியை நிறைவுசெய்கிறேன்: ''எல்லாரையும் மதித்து நடந்திடுங்கள்; சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்துங்கள்; கடவுளிடம் பயபக்தியாயிருங்கள்; அரசருக்கு மதிப்பு கொடுங்கள்'' (1 பேது 2:17).

*(ஆங்கிலத்தில் இக்கட்டுரை ஆசிரியரது stanleyonbible.com*
*என்ற இணையதளத்தில் ஏப்ரல் 8 தேதியிட்ட அவரது 101ஆம் கடிதத்தில் உண்டு.)*

---

R. Stanley, 13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>